# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 18 மடல் 5 | மே – 2018 | ₹1.00


## ஸ்மார்ட்சிவகங்கா செயலி அறிமுக விழா




தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் சிவகங்கை மாவட்ட நிர்வாகமும் இணைந்து அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிக்கவும் சிவகங்கை மாவட்டத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை நலனை மேம்படுத்தவும் ‘ஸ்மார்ட்சிவகங்கா’ செயலியை உருவாக்கியுள்ளன. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 14.04.2018 அன்று நடைபெற்ற ‘ஸ்மார்ட்சிவகங்கா’ செயலி அறிமுக விழாவில் செயலியைத் தமிழகக் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஜி. பாஸ்கரன் அவர்கள் அறிமுகம் செய்துவைத்து, செயலிக்கான கையேட்டை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். அவர் தமது உரையில் ஸ்மார்ட்சிவகங்கா செயலியின் உதவியுடன் பொதுமக்கள் அரசுத் துறைகளுக்கு நேரில் செல்லாமலே அனைத்துத் துறைகளின் பல்வேறு நலத் திட்டங்களின் பயனைப் பெற முடியும் என்றார். சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பி.ஆர். செந்தில்நாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் தகவல் தொடர்பில் கைபேசிச் செயலி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அதைப் பயன்படுத்திக் கொள்ளும்படி விவசாயிகளைக் கேட்டுக்கொண்டார். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி ஜி. லதா இ.ஆ.ப, அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் ஸ்மார்ட்சிவகங்கா செயலியின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் விவசாயிகள் திட்ட விண்ணப்பம் அனுப்பும் முறை பற்றி விளக்கமளித்தார். முன்னதாக, குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. செந்தூர்குமரன் வரவேற்புரை ஆற்றினார். சிவகங்கை மாவட்டத்தின் அனைத்துத் துறைகளின் தலைவர்களும், 450 முன்னோடி விவசாயிகளும் விழாவில் பங்கேற்றனர்.

## மரக்கன்று நடும் விழா



மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் 70ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், கிருஷ்ணகிரி வனத்துறை சார்பில் மாபெரும் மரக்கன்று நடும் விழா 23.04.2018 அன்று நடைபெற்றது. தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் மரக்கன்று நட்டு விழாவைத் துவக்கிவைத்தார். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சி.வி. ராஜேந்திரன் மற்றும் திருமதி. மனோரஞ்சிதம் நாகராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. சி. கதிரவன் இ.ஆ.ப., மாவட்ட வன அலுவலர்கள் திரு. தீபக் எஸ். பில்கி இ.வ.ப., மற்றும் திரு. வரதராஜன் ஆகியோர் பங்கேற்றனர். பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பணியாளர்கள் விழாவில் பங்கேற்றுப் பயிற்சி மைய வளாகத்தில் 70 மரக் கன்றுகள் நட்டனர்.

## பன்னாட்டுப் பயிலரங்கு



ஆஸ்திரேலியாவில் உள்ள உடன்விலங்கு ஒட்டுண்ணிக்கான மன்றமும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஒட்டுண்ணியல் துறையும் இணைந்து “வெப்ப மண்டலத்திலுள்ள உடன்விலங்குகளில் காணப்படும் அக ஒட்டுண்ணி மற்றும் நோய் நுண்மப் பரப்பி மூலம் பரவும் ஒட்டுண்ணி நோய்கள் ஆய்வின் சமீபத்திய முன்னேற்றங்கள்” குறித்த பயிலரங்கைச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 18.04.2018 மற்றும் 19.04.2018ஆம் தேதிகளில் நடத்தின. பயிலரங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் துவக்கிவைத்து, ஆற்றிய தமது உரையில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஆஸ்திரேலியாவின் உடன்விலங்கு ஒட்டுண்ணிக்கான மன்றம் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியைத் தேர்வுசெய்தற்கு நன்றி தெரிவித்தார். மேலும், சிகிச்சை அளிப்பதற்கு முன்னர் உடன் விலங்குகளில் ஒட்டுண்ணி நோய்களைக் கண்டறிவதன் அவசியத்தையும் பன்னாட்டு வல்லுநர்களுடன் ஒன்றிணைந்து கலந்துரையாடி ஒரு பொதுவான நோய்கண்டறிதல் முறையை உருவாக்க வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தினார். ஆஸ்திரேலியாவில் உள்ள உடன்விலங்கு ஒட்டுண்ணிக்கான மன்றத்தின் இயக்குநர் முனைவர் ரெபெக்கா ட்ரௌப், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கா. குமணன் ஆகியோர் பயிலரங்கில் பங்கேற்றனர். முன்னதாக, பயிலரங்கின் அமைப்புச் செயலாளர் மற்றும் பேராசிரியர் முனைவர் அ. சங்கரன் வரவேற்புரை ஆற்றினார். துவக்க விழாவின் இறுதியில் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பாஸ்கரன் ரவிலதா நன்றி கூறினார். பயிலரங்கில் உடன்விலங்கு ஒட்டுண்ணிக்கான மன்றத்தின் இயக்குநர் முனைவர் ரெபெக்கா ட்ரௌப், இஸ்ரேல், ஹீப்ரு பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவப் பள்ளி இயக்குநர் முனைவர் காட் பெனித், உடன்விலங்கு ஒட்டுண்ணிக்கான மன்ற உறுப்பினர் மற்றும் பேராசிரியர் முனைவர் அ. சங்கரன் ஆகியோரின் விரிவுரைகள், செய்முறைப் பயிற்சி, கலந்துரையாடல் அமர்வுகள், உடன்விலங்கு ஒட்டுண்ணி பற்றிய முழு விவர ஆய்வு ஆகியவை இடம்பெற்றன. பயிலரங்கின் நிறைவு விழாவில் அடிப்படை அறிவியல் புல முதல்வர் (பொ.) முனைவர் இல. குணசீலன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கா. குமணன், சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். நாடு முழுவதிலும் இருந்து மொத்தம் 40 உடன்விலங்கு மருத்துவர்கள் மற்றும் கல்வியாளர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர்.

## உலகக் கால்நடை மருத்துவ தினம்

**திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரியில் 30.04.2018அன்று “நாய்களுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளித்தல்” முகாமிற்கு



ஏற்பாடு செய்து, உலகக் கால்நடை மருத்துவ தினம்–2018 கொண்டாடப்பட்டது. முகாமைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் மா. திருநாவுக்கரசு, கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் ஆகியோர் முகாமில் பங்கேற்றனர். முகாமில் மொத்தம் 52 நாய்களுக்குத் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

**நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரியில் 27.04.2018அன்று உலகக் கால்நடை மருத்துவ தினம் கொண்டாடப்பட்டது. கல்லூரி



முதல்வர் (பொ.) முனைவர் கு.அ. பாலசுப்ரமணியம் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களின் உணவுப் பாதுகாப்புத் துறையின் மாவட்ட அலுவலர் மருத்துவர் எ. புஷ்பராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் (பொ.) மருத்துவர் ஆர். மணிசேகரன், கால்நடை மருத்துவர் எம். நடராஜன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மாணவர் மன்றத் துணைத் தலைவர் முனைவர் ஜி. பொன்னுதுரை ஆகியோர் உரையாற்றினர். நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

## துணைவேந்தர் வருகை மற்றும் ஆய்வு

- பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் குன்றக்குடி, வேளாண்

அறிவியல் நிலையத்திற்கு 14.04.2018அன்று வருகை புரிந்து, நிலையத்தின் பல்வேறு செயல்விளக்க பிரிவுகளைப் பார்வையிட்டார். மேலும், நிலையப் பேராசிரியர்களின்



பணிகளை ஆய்வுசெய்து, அவை மேம்படுவதற்கான கருத்துரைகள் வழங்கினார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார், வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. செந்தூர்குமரன், உதவிப் பேராசிரியர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

- பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 30.04.2018அன்று திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரியின் கற்பிக்கும் கால்நடைச் சிகிச்சை வளாகம், மாணவர் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்டு, அவற்றின் செயல்பாடுகளை ஆய்வுசெய்தார். மேலும், கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கான மன்றக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, ஆற்றிய தமது உரையில் இந்தியக் கால்நடை மருத்துவக் கவுன்சிலின் முதல் அட்டவணையில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இடம்பெற்றதற்குக் கல்லூரிப் பணியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் மா. திருநாவுக்கரசு, கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## மாணவர்களுக்கு வெற்றி அறக்கட்டளை நிதியுதவி



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் 1968ஆம் ஆண்டு பி.வி.எஸ்சி. பட்ட மாணவர்கள் உருவாக்கிய ‘வெற்றி 1968 அறக்கட்டளை’, இளநிலைப் பட்ட மாணவர்களின் படிப்புச் செலவிற்கு நிதியுதவி வழங்கியது. இதற்காக 22.04.2018அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவி செல்வி பிரவீனா, ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவி செல்வி சிவகாமசுந்தரி, திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவி செல்வி பிரியதர்ஷினி ஆகியோர்க்கு நிதியுதவி வழங்கி, ‘வெற்றி 1968 அறக்கட்டளை’யின் நிதியளிப்புப் பணியைப் பாராட்டினார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவாக்கக் கல்வி இயக்குநர் மற்றும் வெற்றி அறக்கட்டளைத் தலைவர் முனைவர் கு. துளசி, அறக்கட்டளைச் செயலாளர் மருத்துவர் டி. தனசேகரன், அறக்கட்டளைப் பொருளாளர் மருத்துவர் என். கண்ணன் பாபு, பல்கலைக்கழகத்தின் முன்னாள் அடிப்படை அறிவியல் புல முதல்வர் மற்றும் அறக்கட்டளைத் தலைமை நிலையச் செயலாளர் முனைவர் வி. ராமசாமி மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## பறவைக் காய்ச்சல் இல்லா நிலையை அங்கீகரித்தல் கூட்டம்




நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது தமிழ்நாட்டில் உள்ள கோழிப்பண்ணைப் பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் பொருட்டு ‘பறவைக் காய்ச்சல் இல்லா நிலையை விலங்கு ஆரோக்கியத்திற்கான உலக அமைப்பு அங்கீகரித்தல்’ தொடர்பான கூட்டத்திற்கு 25.04.2018அன்று ஏற்பாடு செய்தது. கூட்டத்திற்குக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கு.அ. பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் பொது மேலாளர் திரு. யு.கே. வாட்ஸ், சென்னை ஏற்றுமதி ஆய்வு நிறுவனத்தின் இணை இயக்குநர் மருத்துவர் ஜே.எஸ். ரெட்டி, நாமக்கல் கால்நடைப் பராமரிப்புத் துறையின் கோழியின நோய் கண்டறிதல் ஆய்வகத்தின் உதவி இயக்குநர் மருத்துவர் எம். விஜயகுமார், கல்லூரியின் கால்நடைப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ. நடராஜன் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுக் கலந்துரையாடினர். கூட்டத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 14 கோழிப் பண்ணைப் பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கல்லூரி மாணவர்கள் மற்றும் தொழில் நிறுவன முகவர்கள் சந்திப்பு



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமானது மும்பையில் உள்ள கால்நடைக் கலப்புத் தீவன உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் இணைந்து கல்லூரியின் நான்காம் ஆண்டு இளநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு 09.04.2018அன்று தொழில்சார் நோக்குநிலை நிகழ்ச்சியை நடத்தியது. மேலும், 2013–14ஆம் சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர்களுக்கு "கால்நடை மருத்துவத்தில் போட்டிச் சவால்களை எதிர்கொள்ளத் தயாராகுதல்" எனும் தலைப்பில் விரிவுரைக்கும் ஏற்பாடு செய்தது. பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள் விரிவுரை ஆற்றினர். இதில் 73 மாணவர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### இரத்த நாளத்தை அணுகும் நுட்பம் குறித்த காணொளிக் காட்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வெட்கிளிப் அமைப்புமூலம் "இரத்த நாளத்தை அணுகும் நுட்பம்" குறித்த விரிவுரைக்கு 20.04.2018அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரியின் கால்நடைச் கிசிச்சைத் துறைப் பேராசிரியர் முனைவர் எம். சந்திரசேகர் விரிவுரை ஆற்றினார். இந்த விரிவுரை காணொலிக் காட்சிமூலம் நாமக்கல், ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. அனைத்துக் கல்லூரிகளின் மாணவர்களும் இதில் பங்கேற்றுக் கலந்துரையாடினர்.

### பயிலரங்கு

- மாதவரம், கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகம் மூலம் "பல்கலைக்கழகப் பண்ணை உற்பத்திப் பொருள்கள் விற்பனைப் பிரிவை ஏற்படுத்தல்" எனும் சுய நிதித் திட்டத்தின்கீழ் "கால்நடைப் பண்ணைக் கழிவு மேலாண்மை" குறித்த ஒரு நாள் பயிலரங்கு 06.04.2018அன்று



நடைபெற்றது. கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். பயிலரங்கில் விரிவுரைகள், செய்முறைப் பயிற்சி, செயல்முறை விளக்கங்கள் ஆகியன இடம்பெற்றன. பயிலரங்க நிறைவு விழாவில் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் மற்றும் பேராசிரியர்கள் பயிலரங்கை ஒருங்கிணைத்தனர். திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த மொத்தம் 42 விவசாயிகள் பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். மேலும் மூன்று ஒரு நாள் பயிலரங்குகள் நடத்தப்பட்டன. "பல்கலைக்கழகப் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தில் பண்ணை உபகரணங்களை உருவாக்குதல்" எனும் சுய நிதித் திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டத்தின் 26 பயனாளிகளுக்கு "மண்ணின்றிப் பசுந்தீவனம் (ஹைட்ரோபோனிக்) வளர்த்தல்" குறித்த பயிலரங்கு 12.04.2018அன்றும், அதே திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டத்தின் 38 பயனாளிகளுக்குப் "புறக்கடைக் கோழிப் பண்ணையாளர்களின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்" குறித்த மற்றொரு பயிலரங்கு 24.04.2018அன்றும் நடத்தப்பட்டன. திருவள்ளூர் மாவட்டத்தின் 20 பயனாளிகளுக்குக் "கறவை மாட்டுப் பண்ணையாளர்களுக்கான பால் தரப் பகுப்பாய்வு" எனும் பயிலரங்கு 25.04.2018அன்று நடத்தப்பட்டது. இப் பயிலரங்குகளின் நிறைவு விழாவில் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

- மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் வேளாண்மைத் துறையும் இணைந்து "விவசாயிகள் நலவாழ்வு" குறித்த பயிலரங்கை 02.05.2018அன்று படாளம், சூனாம்பேடு கிராமங்களில் நடத்தின. இதில் 600 விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### செயற்கை முறைக் கருவூட்டல் பயிற்சி

மாதவரம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் புறநகர் மருத்துவமனைமூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன் கிராமப்புற இளைஞர்களுக்கான பன்நோக்கு செயற்கை முறைக் கருவூட்டல் தொழில்நுட்பர் பயிற்சி இரு தொகுதியாக 07.12.2017–05.01.2018 மற்றும் 07.03.2018– 05.04.2018ஆம் தேதிகளில் நடைபெற்றது. இப்பயிற்சியில் திருவள்ளூ'ர், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தினைச் சார்ந்த 50 கிராமப்புற இளைஞர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மூலம் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் "கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் இயந்திரமயமாக்கல் மற்றும் தானியங்கி கருவிகளைப் பயன்படுத்துதல்" பற்றிய பயிற்சி 19.03.2018 முதல் 21.03.2018 வரையிலும், "கிராமப்புற முன்னேற்றத்திற்கு மாற்று வகைக் கோழி உற்பத்தி – ஜப்பானியக் காடை, வாத்து மற்றும் புறா வளர்ப்பு" பற்றிய பயிற்சி 17.04.2018 முதல் 19.04.2018 வரையிலும்

நடத்தப்பட்டன. இந்த இரு பயிற்சிகளிலும் மொத்தம் 60 நபார்டு உழவர் மன்றப் பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### இடுபொருட்கள் வழங்கும் விழா




சாந்திநல்லா, செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம்மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியிலான பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் 11.04.2018அன்று பெல்லத்திக்கோம்பை கிராமத்தில் செம்மறி, நாட்டுக்கோழி, தீவனம் முதலான இடுபொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது. நீலகிரி மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. முரளி ரம்பா இ.கா.ப. அவர்கள் விழாவைத் துவக்கிவைத்தார். 27 குறும்பர் இனப் பழங்குடியினர் பயன்பெற்றனர்.

### விழிப்புணர்வு நிகழ்ச்சி

20.04.2018அன்று நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் சாந்திநல்லா, செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். அனில்குமார், உதவிப் பேராசிரியர் முனைவர் சு. கிருஷ்ணகுமார் ஆகியோர் பங்கேற்று ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் அசோலா வளர்ப்பு குறித்தும் அவற்றைக் கால்நடைகளுக்கு அளிக்கும் முறைகள் குறித்தும் விளக்கிக் கூறினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றார்.

### நவீன அறுவைச் சிகிச்சைமூலம் கண் பார்வை மீளக் கிடைக்கப்பெறல்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கண் மருத்துவ இயல் பிரிவானது இந்தியா முழுவதிலும் உள்ள கால்நடைகளில் ஏற்படும் கண் குறைபாடுகளைச் சரிசெய்வதற்கான முதன்மை மையமாகச் செயல்பட்டு வருகிறது. அவ்வகையில் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் கதிரியக்கத் துறைப் பேராசிரியை முனைவர் சி. ரமணி தலைமையிலான குழு, பிறவி முதலே பார்வை முற்றிலுமாக இல்லாமல் இருந்த ஒரு மாத வயதுடைய வெள்ளாட்டுக் குட்டிக்கு இரு தரப்புப் பிறவிக் கண் புரை இருந்ததைக் கண்டுபிடித்து, அதற்கு நவீன அறுவைச் சிகிச்சை செய்து கண் பார்வை கிடைக்கச் செய்தது.

### கால்நடை மருத்துவ முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் தஞ்சாவூர் மிருகவதைத் தடுப்புச் சங்கமும் இணைந்து நாச்சியார்பட்டி கிராமத்தில் 13.04.2018அன்று விழிப்புணர்வு மற்றும் கால்நடை மருத்துவ முகாமை நடத்தின. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் பா. மோகன் அவர்கள் முகாமைத் தொடங்கிவைத்தார். முகாமில் 466 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டதோடு, பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் கண்காட்சியும் இடம்பெற்றது. மேலும், சிறந்த பசு மற்றும் சிறந்த கன்றுகளைத் தேர்வு செய்யும் போட்டி நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### இரத்ததான முகாம்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் நாமக்கல் மாவட்டத் தலைமை மருத்துவமனையும் இணைந்து 05.04.2018அன்று இரத்ததான முகாமை நடத்தின. முகாமினைக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கு.அ. பாலசுப்ரமணியம் அவர்கள் தொடங்கி வைத்தார். முகாமில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்பட மொத்தம் 50 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்கள் பங்கேற்று 50 அலகுகள் இரத்தம் தானம் செய்தனர்.

### கண்காட்சி

திருவண்ணாமலை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது திருவண்ணாமலையில் 06.04.2018 முதல் 09.04.2018 வரை ஹைடெக் ஃபேர் இண்டர்நேஷனல் லிமிடெட், திருப்பூர் மூலம் நடைபெற்ற 'விவசாயக் கண்காட்சி–2018'இல் பங்கேற்று, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு குறித்த சிறப்பம்சங்களைக் காட்சிப்படுத்தியது. கண்காட்சியை 15,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

### ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பு

செர்பியாவின் பெல்கிரேடில் 18.04.2018முதல் 21.04.2018வரை நடைபெற்ற வளரும் நாடுகளின் 10ஆவது நச்சியல் மாநாடு மற்றும் செர்பிய நச்சியல் சங்கத்தின் 12ஆவது மாநாட்டில் பல்கலைக்கழகத்தின் கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கதேவரு சரத்சந்திரா அவர்கள் பங்கேற்று, "தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் முட்டை மற்றும் கறிக்கோழி இறைச்சியில் காணப்படும் என்ரோஃபிளாக்சாசின் மருந்தின் வளர்சிதைப் பொருட்கள் மற்றும் குளோர்டெட்ராசைக்ளின் மருந்தின் எச்சங்கள் பற்றிய ஆய்வு" எனும் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார்.

### மாணவர்கள் சாதனை

- பொன்னேரி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மூலம் 'பொன்பிமா'18 எனும் பெயரில் 23.03.2018அன்று நடத்தப்பட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகளில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மாணவர்கள் பங்கேற்று, ஒட்டுமொத்த வாகையர் பட்டம் வென்றனர். மூன்றாம் ஆண்டு மாணவன் செல்வன் அபூர்வ் சக்சேனா, தனது தனித்திறனை வெளிப்படுத்தியற்காக 'ஆண்டின் சிறந்த மாணவராகத்' தேர்வு செய்யப்பட்டார்.

- வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 21.03.2018அன்று கொண்டாடப்பட்ட உலக வன தின விழாவில் பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச். பட்ட மூன்றாம் ஆண்டு

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020
REGISTERED No.TN/CC(S)DN/569/18-20

Posted on 31.05.2018 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
**Dr. N.K. Sudeep Kumar, Ph.D.,** Director of Distance Education i/c, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327 / New No. 485, Anna salai, Nandanam, Chennai - 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University and Printed at University Publication Division, Madhavaram Milk Colony, Chennai - 600 051
**Editor: Dr. N.K. Sudeep Kumar, M.V.Sc., Ph.D., Phone: 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

மாணவர்கள் செல்வன் எஸ். அலிமுதீன் மற்றும் செல்வி ரூத் ஜெமிமா அற்புதராணி ஜெபராஜ் முறையே தமிழ் மற்றும் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசு வென்றனர்.

## நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்



- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு சார்பில் 22.04.2018 முதல் 24.04.2018வரை இலக்கிய நிகழ்ச்சிகள், கல்லூரி வளாகத்தில் மரக்கன்று நடுதல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளைச் சுத்தம் செய்தல் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்து உலகப் புவி நாள் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் 50 மாணவர்கள் பங்கேற்றனர் மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன .
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவும் கல்விச் சிறப்புப் பிரிவும் இணைந்து "போட்டித் தேர்வுகளுக்குத் தயார்செய்தல்" குறித்த ஊக்கப்படுத்தல் விரிவுரைக்கு 11.04.2018அன்று ஏற்பாடு செய்தன. தஞ்சாவூர் மாவட்டப் பதிவாளர் மருத்துவர் மு. கவிதா அவர்கள் விரிவுரை வழங்கி மாணவர்களுடன் கலந்துரையாடினார். மொத்தம் 60 மாணவர்கள் பங்கேற்றனர்.
- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு சார்பில் உலகக் கால்நடை மருத்துவ தினத்தை–2018 முன்னிட்டுத் திருவள்ளூர் மாவட்டத்தின் பந்திகாவனூர் மற்றும் பேரத்தூர் கிராமங்களில் 28.04.2018அன்று கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. முகாமில் 68 மாடு மற்றும் கன்றுகள், 34 ஆடுகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. மேலும், 250 புறக்கடைக் கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய்க்கு எதிராக வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்து அளிக்கப்பட்டது. "விலங்குகள் நமது நண்பர்கள்" எனும் தலைப்பில் பள்ளிச் சிறார்களுக்கு ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. இதில் 20 சிறார்கள் பங்கேற்றனர்.

## பணி ஓய்வு



பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மையத்தின் உதவிக் கணக்கு அலுவலர் திருமதி பி. பழனியம்மாள் அவர்கள் 30.04.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 07.04.1960இல் பிறந்த இவர், 28 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலக ஓட்டுநர் திரு. கே. பச்சியப்பன் அவர்கள் 30.04.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 02.04.1960இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனறி பணியாளர் திரு. சி. டெல்லி அவர்கள் 30.04.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 15.04.1958இல் பிறந்த இவர், 32 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் நி.கு. சுதீப் குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர் (பொ.)

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்